# ஸ்ரீமத்தேவி பாகவதம்

## பி.ஆர்.கண்ணன்

ஸ்ரீமத்தேவிபாகவதம் வேதவ்யாஸ பகவான் அருளியுள்ள 18 மஹாபுராணங்களில் மிக ஸ்ரேஷ்டமானது; ஆதிபராசக்தியின் மஹிமை, லீலைகள், கருணை, மனித தர்மங்கள், மந்திரசக்திகள் முதலிய பல மனிதவாழ்க்கைக்கு அத்தியாவசியமான விஷயங்களுக்கு இந்நூல் அரிய பொக்கிஷமாகும். ஸ்ரீமத் பாகவததைப்போலவே, இந்த கிரந்தமும் 12 ஸ்கந்தங்கள், 18000 ஸ்லோகங்கள் கொண்ட பெரிய புராணமாகும். ஸ்ரீமத்தேவி பாகவத மாஹாத்மியம் ஸ்காந்தபுராணத்தில் மிக அழகாக உரைக்கப்பட்டுள்ளது. இந்த மாஹாத்மியம், ஸ்ரீமத் தேவிபாகவத புராணம் ஆகியவற்றின் சில முக்கியமான அம்சங்களை இக்கட்டுரைத் தொடரின் மூலமாக அறிந்துகொள்ள முயலுவோம்.

**ஸ்ரீமத்தேவிபாகவத மாஹாத்மியம்**

**முன்னுரை**

ஸ்ரீஸ்காந்த புராணம், மானஸ கண்டத்தில் ஐந்து அத்தியாயங்களில் ஸ்ரீதேவிபாகவத மாஹாத்மியம் வெகு அழகாக சொல்லப்பட்டுள்ளது. நைமிசாரணியத்தில் சௌனகர் முதலான மஹரிஷிகளின் பிரார்த்தனையின்பேரில் தீர்க்கஸத்ரத்தின் மத்தியில் ஸூத பௌராணிகர் இதனை எடுத்துரைக்கிறார். முதல் ஸ்லோகத்திலேயே அம்பாள் பிரார்த்தனை வெகு அர்த்தபுஷ்டியுடன் அமைந்துள்ளது.

"ஸ்ருஷ்டௌ யா ஸர்கரூபா ஜகதவநவிதௌ பாலிநீ யா ச ரௌத்ரீ
ஸம்ஹாரே சாபி யஸ்யா ஜததிதமகிலம் க்ரீடநம் யாபராக்யா ।
பஶ்யந்தீ மத்யமாதோ ததநு பகவதீ வைகரீ வர்ணரூபா
ஸாஸ்மத்வாசம் ப்ரஸந்நா விதிஹரிகிரிஶாராதிதாலங்கரோது ||1||"

**"எந்த பராசக்தி ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் மூன்றையும் அந்தந்த காலங்களில் அந்தந்த சக்திகளாக ரூபமெடுத்து இயற்றுகிறாளோ, எந்த தேவிக்கு இந்த ஜகத் முழுவதும் லீலாஸ்தலமாக உள்ளதோ, எந்த தேவி பரா, பஸ்யந்தி, மத்யமா, வைகரி என்கிற நான்கு நிலைகளில் சப்தத்தின் காரணசக்தியாக மிளிர்கிறாளோ, எந்த தேவி பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரால் ஆராதிக்கப்படுகிறாளோ, அந்த ஆதிபராசக்தி சந்தோஷித்து என் வாக்கினை அலங்கரிக்கட்டும்."** நம் சரீரத்தில் சப்தம் நாபியில் பராவாக ஆரம்பித்து, பஸ்யந்தீ, மத்யமா என்ற இரு நிலைகளில் வளர்ந்து, முகத்தில் வைகரீ என்கிற , செவிக்கு எட்டும் நிலையை அடைவது அம்பாளின் கிருபையேதான்.

ஸூதர் சொல்கிறார்: ஸ்ரீமத் தேவி பாகவதம் எல்லா சாஸ்திரங்களுடைய ஸாரம்; முட்கள் நிறைந்த பாபக்காட்டிற்கு கோடரி; எல்லா மனக்லேசங்களையும் நீக்கும் மாமருந்து. ராஜா பரீக்ஷித் பிராம்மண சாபத்தினால் ஏழே நாட்களில் தக்ஷக ஸர்ப்பத்தினால் தீண்டப்பட்டு, துர்மரணம் அடைந்து துர்கதியில் கிடந்தபோது, அவனுடைய புத்திரன் ஜனமேஜயன், ஸாக்ஷாத் வேத வியாஸ பகவானின் முகாரவிந்தம் மூலமாக இந்த திவ்யமான தேவி பாகவதத்தினை சிரவணம் செய்தான். அவருடைய உபதேசப்படி, சரத் நவராத்திரியில் விசேஷ தேவி யக்ஞம் செய்து, தேவி பாகவத சிரவணம் செய்து, தன் பிதாவான

பரீக்ஷித்தை ஸத்கதியில் சேர்த்து, ஸாக்ஷாத் மணித்வீபத்தில், பராசக்தியின் பாதாரவிந்தத்தில் அடைக்கலம் கிடைக்குமாறு செய்தான். இதைவிட வேறு பெருமை தேவி பாகவதத்திற்கு சொல்லவும் வேண்டுமோ?

தர்மம், அர்த்தம் (பொருள்), காமம், மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் வழங்கவல்லது இம்மஹாபுராணம். அம்ருதபானம் செய்தால், செய்த ஒருவனே கிழத்தனமில்லாத நீண்ட வாழ்க்கை கிடைக்கப்பெறுவான்; ஆனால் தேவி பாகவதத்தினை பக்தி சிரத்தையுடன் சிரவணம் செய்தால், அவனுடைய குலமே அந்த அம்ருதப்பயனைப்பெறுவர். ஒரு ஸ்லோகமோ, அரை ஸ்லோகமோ பக்தியுடன் பாராயணம் செய்பவனிடம் தேவி ப்ரீதியடைகிறாள்.

**ஸ்ரீகிருஷ்ணர் கிடைத்தல்**

ஸ்ரீகிருஷ்ணர் த்வாரகையில் அரசாட்சி செய்யுங்காலையில் , அங்கு போஜவம்சத்தை சேர்ந்த ஸத்ராஜித் என்பவன் கடுமையான ஆராதனையின் மூலம் ஸூரியபகவானை மகிழ்வித்து , ஸூரியலோகத்திற்கே சென்று , அவரிடமிருந்து ஸ்யமந்தகமணி என்ற விலைமதிப்பற்ற திவ்விய மணியினைப் பெற்றான். ஒவ்வொரு நாளும் எட்டுபாரம் தங்கம் தரக்கூடிய விசேஷ சக்தியுள்ள மணி அது. ஒருசமயம் கிருஷ்ணர் அவனிடம் விலைமதிப்பற்ற அந்தமணி ராஜாவிடம் இருப்பதே உசிதம் , நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று சொன்னதை , அவன் பொருட்படுத்தவில்லை. பிறகு ஒருநாள் , ஸத்ராஜித்தின் தம்பி ப்ரஸேனன் என்பவன் தன் கழுத்தில் அந்த மணியைக் கட்டிக்கொண்டு , காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வெகு நாட்களாகியும் அவன் திரும்பிவராததால் , ஸத்ராஜித் கவலைகொண்டு , மணிக்காகவே யாரோ அவனைக் கொன்றிருக்கவேண்டும் என்றும் , கிருஷ்ணரே அதற்குக்காரணம் என்றும் நினைத்தான். இந்த விஷயம் வதந்தியாக ஊர் முழுவதும் பரவி , கிருஷ்ணருக்கு கெட்ட பெயர் கிட்டவே, கிருஷ்ணர் அந்த அவப்பெயரைத் துடைக்க எண்ணி , ஒரு நாள் த்வாரகை மக்களுடன் காட்டிற்குச் சென்றார். காட்டில் ப்ரஸேனன் சவத்தையும் , ரத்தச்சுவடை வைத்து அதைப்பின்பற்றி, ஒரு குகையை அடைந்து , குகைக்குள் தற்செயலாக ஜாம்பவானிடம் மணி இருந்தமையால் அவருடன் யுத்தம் செய்ய நேர்ந்தது. யுத்தம் 21 நாள் இரவு பகலாகத் தொடர்ந்தது. 12 நாள் வெளியில் காத்திருந்த த்வாரகை ஜனங்கள் , நகர் திரும்பினர். வஸுதேவரிடம் விருத்தாந்தத்தைச் சொல்லவே , எல்லோரும் கிருஷ்ணரைப்பற்றிய பெரும் கவலைக்குள்ளாயினர். அப்போது நாரதர் வந்து , வஸுதேவரை நவராத்திரி விதானமாக ஸ்ரீ தேவி பாகவதத்தை சிரவணம் செய்து, தேவி பூஜை செய்யுமாறு கூறினார். நாரதர் தேவியின் மஹிமையச் சொல்லும்போது,

**ஸம்ஸாரபம்தஹேதுர்யா ஸைவ முக்திப்ரதாயிநீ ।**
**ஸா வித்யா பரமா தேவீ ஸைவ ஸர்வேஸ்வரேஸ்வரீ ॥**

"ஸம்ஸார பந்தத்திற்கு தேவியே காரணம் ; அதனின்று விடுபடுவதற்கும் தேவியையே சரணடையவேண்டும். தேவியே எல்லா வித்யைகளுக்கும் மூலம் ; அவளே ஈஸ்வரர்களுக்கெல்லாம் ஈஸ்வரி." என்றார்.

வஸுதேவர் இதனை வெகுவாகக் கொண்டாடி , கிருஷ்ணர் பிறந்ததே தேவியின் அனுக்ரகத்தினால் தான் என்று நினைவு கூர்ந்து வெகு சந்தோஷித்தார். அதாவது , சிறைச்சாலையில் தான் இருந்தபோது , கம்ஸனால் ஆறு குழந்தைகள் மரணமெய்யவே ,

மிகுந்த துக்கப்பட்டு , கர்க மஹரிஷியை சிறைச்சாலைக்கு வரச்சொன்னார் வஸுதேவர். மஹரிஷி வந்து , தேவியை பிரார்த்திக்குமாறு உபதேசிக்க , தான் சிறைச்சாலையில் இருப்பதனால் மஹரிஷியையே தன் சார்பில் தேவியை ஆராதிக்குமாறு வஸுதேவர் வேண்டிக்கொண்டார். கர்க மஹரிஷி அவ்வாறே விந்தியமலைக்குச் சென்று விந்தியவாஸினியை வெகுவாக பூஜித்தார். அம்பாள் அசரீரியாக மஹரிஷியிடம் , 'நான் சந்தோஷமடைந்தேன். பூபாரத்தைக் குறைக்க விஷ்ணுவானவர் என் பிரேரணையினால் வஸுதேவர் புத்திரனாக அவதரிக்கும் காலம் நெருங்கிவிட்டது. அக்குழந்தையை வஸுதேவர் கம்ஸனிடம் உள்ள பயத்தினால் கோகுலம் சென்று யசோதையிடம் விடுவார். யசோதையின் பெண் குழந்தையைக் கொண்டுவருவார். கம்ஸனிடமிருந்து தப்பும் அக்குழந்தை என்னுடைய அம்சமாக இருப்பாள்.' என்று அருளினாள். கர்கரும் வஸுதேவரிடம் சொல்லி தேவியின் கருணையை வியந்தனர். இந்த பழைய கதையை நினைவிற்கொண்டு மகிழ்ந்த வஸுதேவர் , இப்போது நாரத மஹரிஷியையே குருவாகக்கொண்டு ஸ்ரீதேவி பாகவத சிரவணம் , தேவி யக்ஞம் எல்லாம் விதானப்படி உடனேயே செய்தார்.

ஆங்கு குகையில் யுத்தம் 21 நாள் (வியாஸர் மூன்று நவராத்திரி காலம் என்று தேவியுடன் இணைத்து வர்ணிக்கிறார்) கிருஷ்ணர் ஜாம்பவானுடன் யுத்தம் செய்தார். அப்போது திடீரென ஜாம்பவான் கிருஷ்ணரை ராமராகவே பார்த்து வருந்தி அவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு, ஸ்யமந்தகமணியை கிருஷ்ணரிடம் ஒப்படைத்தார். கூடவே , தன் பெண் ஜாம்பவதியை கிருஷ்ணருக்கு விவாகம் செய்துகொடுத்தார். வஸுதேவர் தேவி யக்ஞத்தை பூர்த்தி செய்து கடைசி நாளாகிய ஒன்பதாவது நாளன்று , பிராம்மண போஜனம் , தக்ஷிணை எல்லாம் வழங்கிய அதே க்ஷணத்தில் , கிருஷ்ணர், மணியுடனும், ஜாம்பவதியுடனும் உள்ளே நுழைந்தார். எல்லோருடைய சந்தோஷத்திற்கும் அளவேயில்லை. தேவிபாகவத சிரவணத்தின் பயனாக , வஸுதேவருக்கு கிருஷ்ணர் இரண்டாம் தடவையாக கிடைத்தார். தேவி உபாஸனையின் மூலமாகவே வஸுதேவருக்கு கிருஷ்ணர் திரும்பவும் இப்போது கிடைத்தார் என்பதை ஸ்ரீமத் பாகவதமும் நன்றாகவே தெரிவிக்கிறது. இது விசேஷமான விஷயம்.

(வளரும்)